**தலைப்பு 409 – உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை. ஏனெனில் இவ் அமைச்சு 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய அமைச்சொன்றாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கணக்குகளின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,127,977,355 ஆக காணப்பட்ட போதிலும் திறைசேரி அச்சீட்டுத்தாள்களின் பிரகாரம் இது ரூபா 9,283,024,799 ஆக காணப்பட்டதால் ரூபா 155,047,444 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது. | முன்னாள் அமைச்சிற்கான சொத்துக்களை கணக்கீடு செய்வதிலுள்ள தாமதம் காரணமாக உள்விவகாரங்கள் பிரிவுக்குரிய ரூபா 41,582,000 தொகை உரிய திகதியில் உள்ளவாறு திறைசேரிப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போது இது சீர்செய்யப்பட்டு, ரூபா 182,599,809 நிதியல்லாச் சொத்துகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | திறைசேரி அச்சீட்டுத் தாள்களுடன் ஒப்பிட்டு சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விசேட அதிரடிப்படையின் திறைசேரி அச்சீட்டுத் தாள்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,387,722,300 ஆகக் காணப்பட்ட போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் இது ரூபா 7,388,679,748 ஆகக் காணப்பட்டது. இதனால் அப் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 975,448 வேறுபாடொன்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் குறித்த தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விசேட அதிரடிப்படை எனக்கு அறிவித்திருந்ததுடன், இது தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சீட்டுத்தாள்களினதும் இந்த அமைச்சின் கீழ் உள்ள உள்நாட்டலுவல்கள் பிரிவு, அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் உள்விவகாரங்கள் பிரிவின் புத்தகங்களினதும் முற்பண மீதிகளுக்கு இடையில் முறையே ரூபா 57,913,974, ரூபா 49,481,591 மற்றும் ரூபா 8,432,382 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டன. | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பெறுமதிகளுக்கு இடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்குவதற்காக தயாரிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,138,453 சேர்த்தல்கள் மற்றும் ரூபா 10,570,835 கழித்தல்கள் இவ் வேறுபாட்டிற்கான காரணம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | திணைக்கள புத்தகங்களை திறைசேரி அச்சீட்டுத் தாள்களுடன் ஒப்பிட்டு சரியான பெறுமதியை காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சீட்டுத் தாள்களின் பிரகாரம் ரூபா 4,063,721,374 தொகை கட்டுநிதி மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும் பரீட்சை மீதியில் வெவ்வேறு பெறுமதிகளுடன் கட்டுநிதி மீதி காட்டப்பட்டிருந்தது. | ஏனைய வளமூலங்களில் இருந்து செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரை பெறப்பட்ட ரூபா 60,705,997 தொகை திறைசேரி அச்சீட்டுத் தாள்களின் பிரகாரம் | கட்டுநிதி மீதி சரியாக காட்டப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதற்கிணங்க திறைசேரியில் இருந்து பெறப்பட்ட கட்டுநிதி மீதியாக ரூபா 4,048,890,132 செலவு மீதியும் கட்டுநிதி கணக்கு 7002 இற்கான ரூபா 4,109,685,986 வரவு மீதி மற்றும் ரூபா 4,124,427,372 செலவு மீதி என்பன பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்ட ரூபா 4,063,721,374 தொகையான கட்டுநிதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

இராஜாங்க அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டலுவல்கள் பிரிவு, அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, விசேட அதிரடிப்படை பிரிவு, உள்விவகாரங்கள் பிரிவு மற்றும் உள்ளகப் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றால் கடன் முற்பணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | கடன் முற்பணப் பதிவேட்டை முறையாக பேணுவதற்கு அனைத்துப் பிரிவுகளிற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | கடன் முற்பணப் பதிவேடுகள் முறையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | பொது வைப்புப் பதிவேடு விசேட அதிரடிப்படை, அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரிவு ஆகியவற்றால் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொது வைப்புப் பதிவேட்டை முறையாக பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொது வைப்புப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் உள்விவகாரங்கள் பிரிவால் பொறுப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புகள் இயன்றவரை சரிபார்க்கப்படக்கூடியவாறு பொறுப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்பு பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் கொடுக்கப்பட்ட மாதிரிக்கு இணங்க நட்டங்கள் மற்றும் சேதங்களுக்கான பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் உள்விவகாரங்கள் பிரிவின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டு வருகின்றதுடன் நாளது வரையாக்கப்படுவதற்கு 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டங்கள் அல்லது சேதங்கள் எதுவும் காணப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 2020 ஆம் ஆண்டிற்கான செலவினங்களை அறிக்கையிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி முதல் 2020 ஆகஸ்ட் 31 வரை முன்னாள் 5 அமைச்சுக்களின் 3 செலவினக் குறியீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,303,293,470 கூட்டுமொத்தமான செலவினம், 2020 செப்தெம்பர் 01 இல் தொடங்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் தொடக்கச் செலவினங்களாகக் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டுள்ளது. | அந்த அமைச்சின் கீழ் முன்னாள் அமைச்சிற்குரிய செலவினங்களை காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 27,646,429,000 நிதியேற்பாட்டில் ரூபா 25,690,484,007 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாட்டில் ஏறத்தாழ 7 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 21 செலவினக் குறியீடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 12,735,000 மொத்த நிதியேற்பாடும் | கொவிட் 19 உலகளாவிய தொற்றுநோய் நிலைமை, அமைச்சுக்களின் நோக்கெல்லை மாற்றம், அமைச்சருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளின் சேமிப்புக்கள், இயந்திரங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கட்டிடத்தின் உத்தரவாதக் காலப்பகுதிகள் காரணமாக பராமரிப்பு கிரயத்தை இழிவுபடுத்துதல் ஆகியவை | நிதியேற்பாடுகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சேமிக்கப்பட்டிருந்தது. 38 மீண்டெழும் செலவினக் குறியீடுகளில் 20 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலும், 30 மூலதனச் செலவினக் குறியீடுகளில் 17 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலுமான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | பிரதானமாக தாக்கம் செலுத்திய காரணங்கள் ஆகும். | |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டலுவல்கள் பிரிவின் ரூபா 1,209,280, விசேட அதிரடிப்படையின் ரூபா 6,626,689, உள்விவகாரங்கள் பிரிவின் ரூபா 1,644,575 மற்றும் உள்ளக பாதுகாப்புப் பிரிவின் ரூபா 2,285,345 உள்ளடங்கலான பொறுப்புக்களின் ரூபா 11,765,889 கூட்டுமொத்த தொகை நிதிக்கூற்றுக்களின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தலைப்பிற்கு (409) சேராத 13 செலவினக் குறியீடுகளிற்குரிய ரூபா 1,015,033 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தலைப்பு 409 தொடர்பான நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 16 செலவினக் குறியீடுகளிற்குரிய ரூபா 133,310 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்த பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால் அந்தக் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>உள்விவகாரங்கள் பிரிவு தொடர்பான ரூபா 1,644,575 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் விசேட அதிரடிப்படை தொடர்பான ரூபா 6,626,689 தொகையும் உள்ளக பாதுகாப்புப் பிரிவு தொடர்பான ரூபா 2,285,345 தொகையும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் அந்த பெறுமதிகள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு பொறுப்புகளாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் அனைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இடமாற்றம் செய்யப்பட்ட, இறந்த மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உள்நாட்டலுவல்கள் பிரிவின் உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 242,700, ரூபா 197,400 மற்றும் ரூபா 138,042 கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு 2021 யூன் வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அக்ரஹாரா காப்புறுதி உத்தரவாதம் அளிக்கப்பட்டதனால் தொடர்ச்சியாக கடன் தவணைகளை செலுத்த தவறியதன் காரணமாக கடனைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு காப்புறுதி நிதியத்திற்குத் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியத்தை கையாளும் சமயத்தில் மாற்றப்படுவதற்கு அமைச்சிற்கு அறிவிக்காமல் வெளிநாட்டிற்கு சென்ற பெண் உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவீடு செய்யுமாறு அனைத்து தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு | இடர் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஓய்வூதியங்களை மாற்றுவதற்கான மீளப்பெற முடியாத வாக்குறுதிகளின் பிரகடனம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | உரிய அதிகாரிகளிடம் இருந்து மீளப்பெற முடியாத வாக்குறுதிகளின் கூற்றுக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டது. | இடர் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஓய்வூதியங்களை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மீளப்பெற முடியாத வாக்குறுதிகளின் பிரகடனம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104 (3) மற்றும் 104 (4) | விபத்து இடம்பெற்று 07 நாட்களுக்குள் பூர்வாங்க அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் சேதத்தின் பெறுமதியை இனங்காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அறிக்கைகளை சமர்ப்பித்து சேதத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 565 (5) | ஒவ்வொரு மாதத்திற்கும் பொது 71 மாதிரியில் தயாரிக்கப்பட வேண்டிய மாதாந்த வைப்பு பொழிப்பின் கூற்றுக்கள் தொடர்ந்துவரும் மாதத்தின் இறுதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை . | அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2020 ஒக்தோபர் 14 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். | மாதாந்த வைப்பு பொழிப்பு கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முறையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 (1) மற்றும் (2) | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 2,561,468 தொகை மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ரூபா 830,525 தொகையான பொது வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று உரிய வைப்பாளர்களை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 751 (2) | விசேட அதிரடிப்படையின் கெபிதிகொல்லாவ முகாமின் கட்டிடங்களில் உள்ள மின் விசிறிகள், ஏனைய மின்சாதனங்கள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் போன்றன நிதிப் பிரமாணம் 751(2) இன் பிரகாரம் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | விசேட அதிரடிப்படையின் கெபிதிகொல்லாவ முகாமின் கட்டிடங்களில் உள்ள மின் விசிறிகள், ஏனைய மின் உபகரணங்கள் மற்றும் நீர் தாங்கிகள் போன்றவற்றை பதிவேட்டில் பதிவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 752 (4) | திருகோணமலை முகாமில் 2019 ஆம் ஆண்டிற்கான இருப்பு மெய்மையாய்வின் போது பற்றாக்குறைகள் மற்றும் மேலதிகங்கள் காணப்பட்ட போதிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசேட அதிரடிப்படையின் திருகோணமலை முகாமில் பயிற்சி உத்தியோகத்தர்களுக்கு நேரடி வெடிமருந்துகளை வழங்கும் போது கையிருப்பு புத்தகங்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. கந்தளாய் முகாமின் தொடர்பாடல் உபகரணங்கள் பழுதுபார்ப்பதற்காக மற்றுமொரு முகாமிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் அங்கு பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | குறைபாடுகள் மற்றும் மேலதிகங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மென்பொருள் அபிவிருத்தி மற்றும் கிராம சேவையாளர் பயிற்சி செயற்திட்டம் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ரூபா 15,352,353 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கிராம சேவையாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான | கருத்துரை வழங்கப்படவில்லை. | மென்பொருள் அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து நன்மைகளை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கிராம உத்தியோகத்தர்கள் |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செலவிட்ட பணம் வீணாகியிருந்தது. | | பயிற்றுவிக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்து கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருநாகல் மாவட்டத்தில் அவசர காலநிலையினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்காக ஆலயத்தில் பாதுகாப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 960,315 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. குருநாகல் மாவட்டத்தின் வரந்தன கந்தவை அண்மித்த 19 குடும்பங்கள் அதிக ஆபத்தில் இருப்பதாக 2016 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட புவியியல் ஆய்வு அறிக்கையின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களில் 13 குடும்பங்கள் குறித்த பிரதேசத்தில் 2021 பெப்ரவரி 18 வரையிலும் வசித்தமை அவதானிக்கப்பட்டது. சிறிய பூட்டிக் கொண்ட அபாயகரமான பகுதி இல்லாத இடத்தில் பயனாளி ஒருவரிற்கு சொந்தமான காணியொன்று காணப்பட்ட போதிலும் அக் காணியில் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,200,000 வழங்குவதற்குப் பதிலாக புதிய வீடு ஒன்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,600,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பாதுகாப்பு நிலையங்களின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் பாதிப்புக்குள்ளாகும் குடும்பங்களை அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இருந்து அகற்றி, வழிகாட்டலின் பிரகாரம் உதவிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாத்தறை மாவட்டத்தில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நலன்களை வழங்குதல். | | |
| (i) | 6 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 70 பயனாளிகளுக்குச் சொந்தமான காணிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 73,898,280 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 21 பயனாளிகள் பாதி பூர்த்தியடைந்த வீடுகளில் தங்கியுள்ளனர். | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிர்மாணங்களை பூர்த்தி செய்திருக்காத அப் பயனாளிகளிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 11 பிரதேச செயலக பிரிவுகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக 49 பயனாளிகளுக்கு ரூபா 46,604,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் காணிகளை கொள்வனவு செய்வதற்காக 5 பயனாளிகளுக்கு ரூபா 2,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது; அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | கொட்டகலை பிரதேச செயலக பிரிவின் பயனாளி ஒருவருக்கு வீடொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,590,000 தொகை வழங்கப்பட்டு வீடு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பயனாளி கொள்வனவு செய்யப்பட்ட வீட்டில் தங்கியிருக்காததுடன் அவர் அனர்த்தத்தை எதிர்கொண்ட வீட்டில் தங்கியிருந்தார். | -மேற்படி- | பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் இருந்து பயனாளிகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 05 பிரதேச செயலக பகுதிகளில் உள்ள 55 பயனாளிகளுக்கு ரூபா 126,678,675 தொகை வழங்கப்பட்டுள்ள போதிலும் 1 தொடக்கம் 4 தவணைகளில் நன்மைகளைப் பெற்றிருந்த 41 பயனாளிகள் அவர்களது வீடுகளின் வேலைகளை பூர்த்திசெய்திருக்கவில்லை. 2 பயனாளிகளின் காணிகள் அதிகரித்திருந்தன. | -மேற்படி- | நலன்களை பயன்படுத்தி நிர்மாணங்களை பூர்த்தி செய்யாதமைக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம், பயனாளி ஒருவரால் ரூபா 1,200,000 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட வீடு தொடர்பான திட்டத்திற்கு அதனது அங்கீகாரத்தை வழங்கியிருக்கவில்லை. | -மேற்படி- | வீட்டின் திட்டத்திற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (vi) | அனர்த்தத்திற்கு முகங்கொடுத்திருந்த பிரதேசத்தில் காணியை கொள்வனவு செய்து வசித்திருந்த பயனாளி ஒருவரினால் வீட்டின் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும் 7 பயனாளிகளுக்கு ரூபா 1,900,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் பணிகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | -மேற்படி- | பயனாளிகளால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பெற்றுக்கொள்வதற்கும், மண்சரிவு பகுதிகளிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்து, காலதாமதமின்றி நலன்ககள் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | மொனராகலை நிர்மாண செயற்திட்டம் | | |
| (i) | சியம்பலாண்டுவ பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மடம் ஒன்றிற்கு அருகாமையில் உள்ள இடிந்த கல்லை அகற்றும் பணியின் போது உடைந்த கற்களை அகற்றுவதற்காக ரூபா 123,594 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உரிய பணி பூர்த்தி செய்யப்படாதமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | புத்தல பிரதேச செயலக பிரிவின் பாதுகாப்பு நிலைய புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான செயற்திட்டத்தின் கீழ் ஆலயத்தின் கட்டிடத்தை மேம்படுத்துவதற்கான மதிப்பீடு ரூபா 969,483 ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 481,035 இற்கு மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் வேறுபாடு 49.6 சதவீதமாக காணப்பட்டது. | -மேற்படி- | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாணங்கள் திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தொழிலாளர்களின் வீடுகளுக்குப் பின்னால் தடுப்புச் சுவரை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,605,400 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கற்கட்டுமானம் மீது இடப்பட்ட கொங்கிரீட் அடுக்கு கழுவிச் செல்லப்பட்டு தடுப்புச்சுவரின் சில பகுதிகள் சேதமடைந்து கற்கள் மேலே வந்திருந்தன. | -மேற்படி- | குறித்துரைக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீள்குடியேற்ற செயற்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மைகளை வழங்குதல். | | |
| (i) | பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை பிரதேச செயலக பிரிவில் 3 பயனாளிகளுக்கு ரூபா 599,925 தொகையான மூன்று காசோலைகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பயனாளிகளிற்கு நலன்கள் ஒழுங்காக கையளிக்கப்பட வேண்டும். |
| (ii) | பதுளை மாவட்டத்தில் 2020 பெப்ரவரி, நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 68 வீடுகளின் ஆரம்ப தரை தயார்படுத்தல் மற்றும் அடித்தளம் அமைப்பதற்காக ரூபா 13,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 13 வீடுகளின் அடித்தளங்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வீடொன்று 650 சதுர அடியில் காணப்பட வேண்டிய போதிலும் 5 வீடுகளுக்கு முறையான மதிப்பீடு இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 51 வீடுகளுக்கு அடித்தளம் அமைப்பதற்காக வீடொன்றிற்கு ரூபா 180,000 படி ரூபா 9,180,000 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், அத்திவாரம் இடப்பட்ட 30 வீடுகளில் 71 சதுர அடி குறைவாக காணப்பட்டதுடன் 22 வீடுகள் 26 சதுர அடிக்கு குறைவாக காணப்பட்டன. ஆரம்ப | -மேற்படி- | உரிய நியமங்கள் மற்றும் குறிப்புரைகளின் பிரகாரம் நலன்களை பயன்படுத்தி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தரை தயார்படுத்தல் மற்றும் அத்திவாரங்களை வெட்டுதல் ஒப்பந்ததாரரால் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ் வேலை பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (iii) | பதுளை மாவட்டத்தில் 2020 திசெம்பர் மாதத்தில் 31 பயனாளிகளுக்கு இரண்டாம் தவணையாக ரூபா 9,300,000 தொகை செலுத்தப்பட்டுள்ள போதிலும் 2021 ஏப்ரல் 01 வரையிலும் 3 வீடுகளில் மாத்திரம் சுவர்கள் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க கொடுப்பனவிற்காக 3 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இரண்டாவது தவணை மூலம் செய்யப்பட வேண்டிய பணிகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | வழங்கப்பட்ட நலன்கள் தொடர்பான நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | பசறை பிரதேச செயலக பிரிவில் உள்ள பயனாளி ஒருவருக்கு 2020 செப்தெம்பர் 16 இல் அவரது சொந்த காணியில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக முதல் தவணையாக ரூபா 200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 மார்ச் 22 வரையிலும் அடித்தளம் இடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நலன்களை பயன்படுத்தி நிர்மாணங்களை மேற்கொண்டிருக்காத பயனாளிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (v) | காணியை கொள்வனவு செய்வதற்காக ரூபா 400,000 தொகையும் வீட்டை நிர்மாணிப்பதற்காக முதல் தவணையாக ரூபா 200,000 தொகையும் ஹாலிஎல பிரதேச செயலக பிரிவில் உள்ள பயனாளி ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீள்குடியேற்ற செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள படி, கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 18 வரையிலும் | -மேற்படி- | வழிகாட்டலின் பிரகாரம் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் தவணையை விடுவிப்பதற்கு வீட்டின் திட்டத்திற்கு ஹாலிஎல மாகாண சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | ஹப்புத்தளை பிரதேச செயலகத்தில் கஹகலவத்தை தமிழ் வித்தியாலய பாதுகாப்பு நிலையத்தின் புனரமைப்புக்களிற்குரிய கொங்கிறீட் தொடர்பாக ரூபா 967,828 தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும் கொங்கிறீட்டிற்காக அத்தகைய பணம் செலவிடப்பட்ட காணித் துண்டில் 12 இடங்களில் 26.92 மீற்றர் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. | -மேற்படி- | குறித்துரைக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் பாதுகாப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்படாதமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | பண்டாரஎலிய தம்பேதன்ன தமிழ் வித்தியாலயத்தின் இல. 2 தமிழ் வித்தியாலயத்தின் பாதுகாப்பு நிலையத்தை புனரமைப்பதற்காக ரூபா 970,017 தொகை செலவிடப்பட்டிருந்தது. கொங்கிறீட் இடப்பட்டு சீமெந்து இடப்பட்ட காணித் துண்டில் 05 இடங்களில் 12.20 மீற்றர் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | களுத்துறை மாவட்டத்தில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதற்கான செயற்திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்குதல். | | |
| (i) | களுத்துறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களுக்கு 2017 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை ரூபா 1,363,413,225 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த நிதியேற்பாட்டில் ரூபா 929,986,597 தொகை செலவிடப்பட்டிருந்தது. 13 பிரதேச செயலகங்களில் முந்நூற்று ஐம்பத்தைந்து பயனாளிகள் இனங்காணப்பட் வீடொன்றை | கருத்துரை வழங்கப்படவில்லை. | வழங்கப்பட்ட நலன்களை பயன்படுத்தி வீடுகளை நிர்மாணித்திருக்காத பயனாளிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்காக ஒவ்வொருவரிற்கும் ரூபா 1,200,000 படி ரூபா 310,466,530 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 05 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 13 பயனாளிகளால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 25 பயனாளிகளுக்கு நான்காம் தவணை வரை நலன்கள் வழங்கப்பட்ட போதிலும், 37 வீடுகளில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | வழங்கப்பட்ட நலன்களைப் பயன்படுத்தி வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான தொழில்நுட்பம் தொடர்பாக பரீட்சித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | பயனாளியால் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்காக ரூபா 400,000 தொகையையும் அக் காணியில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,200,000 தொகையையும் வழங்கும் முறையின் கீழ் களுத்துறை மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களில் இருந்து 267 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதற்கிணங்க காணிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 105,695,000 தொகையும் அக் காணிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 245,151,418 தொகையும் உள்ளடங்கலாக நலன்களாக 2020 திசெம்பர் 31 வரை ரூபா 350,846,418 கூட்டுமொத்த தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 08 பிரதேச செயலகங்களில் 139 பயனாளிகளால் வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iv) | வீடுகள் சேதமடைந்த பயனாளிகளால் அவர்களுக்குச் சொந்தமான வேறொரு பாதுகாப்பான இடத்தில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக 13 பிரதேச செயலகங்களில் உள்ள 135 பயனாளிகளுக்கு ரூபா 92,097,649 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 06 பிரதேச செயலகங்களில் உள்ள 72 பயனாளிகளால் வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 13 பிரதேச செயலகங்களில் உள்ள 122 பயனாளிகளுக்கு வீட்டுடன் கூடிய காணியை கொள்வனவு செய்வதற்காக ரூபா 179,676,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2 பிரதேச செயலகங்களில் உள்ள 12 பயனாளிகளால் வீட்டுடன் கூடிய காணியை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட நலன்களை பயன்படுத்தாதமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- | வழங்கப்பட்ட நலன்களை பயன்படுத்தாமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மாத்தளை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட புரிஜ்ஜல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர் சார்பாக பெறப்பட்ட ரூபா 36,012 நலன் கணக்காய்வு சமயம் வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மாத்தளை, தம்புள்ளை, உக்குவெல மற்றும் நாவுல ஆகிய பிரதேச செயலகங்களினால் கணக்காய்வு காலம் வரை வீட்டு சேதங்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டிருக்காத 23 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 06 சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாத்தளை பிரதேச செயலகத்தாலும் 02 சந்தர்ப்பங்கள் தொடர்பாக உக்குவெல பிரதேச செயலகத்தாலும் வழிகாட்டலின் | கணனிகளின் பிழைகள், பழுதுபார்க்க இயலாமை மற்றும் இணைய வசதிகளின் பலவீனம் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை ஒன்லைன் முறைமையில் உள்ளடக்க முடியாதுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். | தாமதமின்றி வீட்டு சேதங்களிற்கான நட்டஈடுகள் வழங்கப்பட வேண்டியதுடன் இயற்கை அனர்த்த நிலைமைகள் தொடர்பான விபரங்கள் ஒன்லைன் முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

பிரகாரம் நட்டஈட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டலின் பிரகாரம் மாத்தளை மற்றும் உக்குவெல பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட இயற்கை அனர்த்த நிலைமைகள் ஒன்லைன் தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஏனைய அவதானிப்புக்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பதுளை மாவட்டத்தின் அனர்த்த வீடமைப்பு நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 199,975 பெறுமதியான காசோலையொன்று பயனாளியின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அனர்த்த வீடமைப்பு நிதியக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கோ அல்லது அறவீடு செய்வதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நலன்கள் தொடர்பான காசோலைகள் கணக்கிற்கு சரியாக செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பதுளை மாவட்டத்தின் பயனாளிகளால் ரூபா 899,900 பெறுமதியான நான்கு காசோலைகள் அனர்த்த வீடமைப்பு நிதியக் கணக்கில் வைப்பிலிடப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அக் காசோலைகள் காலாவதியானதன் காரணமாக பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. | -மேற்படி- | நலன்கள் தாமதமின்றி பயனாளிகளிற்கு வழங்கப்பட வேண்டும். |
| (இ) | வழிகாட்டலின் பிரகாரம் முதல் தவணையை விடுவிப்பதற்காக மாதிரி இல. 3 இல் கொடுக்கப்பட்டுள்ள மேற்பார்வைத் தாள் பயன்படுத்தப்பட வேண்டும் | -மேற்படி- | தவணைப்பணம் விடுவிக்கப்படும் போது வழிகாட்டலில் வழங்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மேற்படி மாதிரியை பயன்படுத்தாமல் பதுளை மாவட்டத்தில் உள்ள 51 வீடுகளுக்காக ரூபா 9,180,000 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. | | மாதிரிகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மாத்தளை மாவட்டத்தில் அனர்த்தங்களினால் சேதமடைந்த வீடுகளுக்கான வீடமைப்பு உதவிகள் மற்றும் நட்டஈடுகளை வழங்கும் போது, 01/2020 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br>வழிகாட்டலின் 4(V) இன் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் நிதியேற்பாடுகளை பெற்ற பின்னர் 14 நாட்கள் முதல் 02 மாதங்களும் 10 நாட்களும் வரையான தாமதத்துடன் நாவுல பிரதேச செயலகத்தால் 20 சந்தர்ப்பங்களில் ரூபா 198,000 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. உக்குவெல பிரதேச செயலகத்திற்குட்பட்ட முவாகல கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவரின் சார்பாகவும், இம்புல்பிட்டிய பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவரின் சார்பாகவும் உக்குவெல பிரதேச செயலகத்திற்கு நிதியேற்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் ரூபா 10,000 தொகையான செலுத்த வேண்டிய முற்பணம் கணக்காய்வு காலம் வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டுள்ளது. கணனிகளின் பிழைகள், பழுதுபார்க்க இயலாமை மற்றும் இணைய வசதிகளின் பலவீனம் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக தகவல்களை ஒன்லைன் முறைமையில் உள்ளடக்க முடியாதுள்ளது. கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நலன்கள் தாமதமின்றி பயனாளிகளிற்கு வழங்கப்பட வேண்டும். |
| (உ) | வில்கமுவ பிரதேச செயலக பிரிவில் 03 பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 3,094,977 தொகையான இரண்டு | கருத்துரை வழங்கப்படவில்லை. | பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிப்பதற்காக முறையான அங்கீகாரத்தை |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கைகளை மாத்தளை மாவட்டச் செயலாளர் கைச்சாத்திட்டிருந்த போதிலும் 2006 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 89(1) ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த உடன்படிக்கைகளுக்கு கமநல ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வெஹெரகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் நன்கு நிர்மாணிக்கப்பட்ட பயிர்ச்செய்கைக்குரிய கிணற்றை தோண்டி சுவரைச் சுற்றி மண்ணை நிரப்புவதற்காக ரூபா 90,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கிணற்றின் சுவரைச் சுற்றி மண் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொண்டு கிணறுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச மரணச் சடங்குக்காக நுவரெலியா மாவட்டச் செயலாளரிற்கு உள்நாட்டலுவல்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு ரூபா 06 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் குறித்த நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 592,305 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. களனிப் பகுதியில் அமைந்துள்ள நிறுவனமொன்றிலிருந்து சன்ஸ்கிரீன், ஒலிபெருக்கிகள் மற்றும் ஜெனரேட்டர்கள் விநியோகிக்கப்பட வேண்டியிருந்ததன் காரணமாக களனியில் இருந்து நோர்வூட் பகுதிக்கு அப் பொருட்களை கொண்டு செல்வதற்கு போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 333,200 தொகை செலவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் குறித்த பெறுகைக்கு பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | தகவல்களின் பிரகாரம் இது தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 6 மில்லியனாக உள்ளதென உரிய பிரிவுகள் அறிவித்திருந்தன. | செலவினங்களிற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விசேட அதிரடிப்படையின் காலி முகாமின் GPS இயந்திரம் தவறவிடப்பட்டதால் ஏற்பட்ட நட்டம் ரூபா 73,672 என நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் விசேட அதிரடிப்படையில் 03 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த 02 நட்டங்கள் மற்றும் சேதங்களின் ரூபா 4,756,200 கூட்டுமொத்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | GPS இயந்திரம் தவறவிடப்பட்டதால் ஏற்பட்ட நட்டம், தவறுதலாக நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நி.பி. 103(1)(ஊ) ஐ பின்பற்றி பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | ஏற்பட்ட நட்டங்களும் சேதங்களும் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் பொறுப்பான தரப்பினரிடமிருந்து இது அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | விசேட அதிரடிப்படையின் ரூபா 132,058 தொகையான 03 நட்டங்களை, நட்டங்கள் மற்றும் சேதங்களாக பதிவு செய்வதற்கு 6 தொடக்கம் 35 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி எடுத்திருந்தது. | விசேட அதிரடிப்படைக்கு ஏற்பட்ட சில நட்டங்கள் நீண்ட காலப்பகுதியின் பின்னர் பதிவு செய்யப்பட்டுள்ளன. | தாமதமின்றி நட்டங்களும் சேதங்களும் பதிவுசெய்யப்பட வேண்டும். |
| (இ) | 2020 நவம்பர் 04 இல் விசேட அதிரடிப் படைக்கு சொந்தமான ஜீப் ஒன்று விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் குறித்த விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 1,798,583 தொகை என நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டம் 2020 நவம்பர் 04 இல் ஏற்பட்டதுடன் விசாரணைக் குழுவை நியமனம் செய்த பின்னர் நட்டம் மதிப்பிடப்பட்ட நேரத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் பூர்த்தியடைந்திருந்தது. ஆகையால் இவ் விபத்தினால் ஏற்பட்ட நட்டம் குறித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நட்டங்களும் சேதங்களும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையான காலப்பகுதி தொடர்பாக 2007 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற விபத்துக்களினால் விசேட அதிரடிப்படையின் 10 வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 8,108,879 ஆக காணப்பட்டதுடன் குறித்த நட்டங்களை அறவீடு செய்வதற்கு அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | உள்நாட்டலுவல்கள் பிரிவில் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற வாகன விபத்துக்கு காரணமான முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் மக்கள் தொடர்பு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 26,277 தொகை 2021 ஏப்ரல் 22 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நட்டங்களை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

**பொதுமக்களிற்கான சேவைகளை வழங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவசரநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு நன்கொடைகளை சேகரிப்பதற்காக திறக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள் மற்றும் சீன அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட நிதிகளின் அளவு ரூபா 294.75 மில்லியன் தொகையாகும். எவ்வாறாயினும், இந்த நிதியை அனர்த்த நிவாரண சேவை | அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு ரூபா 294.75 மில்லியன் தொகையான குறித்த நிதியை பயன்படுத்தி மண்சரிவு மற்றும் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு பாதுகாப்பான இடங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நோக்கங்களை நிறைவேற்றக்கூடியவாறு நன்கொடையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் பயன்படுத்தப்பட வேண்டும். |

நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காக போதுமானளவு நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 5 பிரிவுகளின் பதவிகளில் 3108 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களிற்கான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சேவைத் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |